ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வாணிலா முறுவல் ॥

*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வாணிலா முறுவல் ॥

## நைமிசாரணியம்

‡வாணிலா முறுவல் சிறு நுதல் பெருந் தோள்⋆
மாதரார் வன முலைப் பயனே
பேணினேன்⋆ அதனைப் பிழை எனக் கருதிப்⋆
பேதையேன் பிறவி நோய் அறுப்பான்⋆
ஏண் இலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி⋆
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன்⋆ வந்துன் திருவடி அடைந்தேன்⋆
நைமிசாரணியத்துள் எந்தாய் (1)

சிலம்படி உருவின் கரு நெடுங்கண்ணார்⋆
திறத்தனாய்! அறத்தையே மறந்து⋆
புலம் படிந்துண்ணும் போகமே பெருக்கிப்⋆
போக்கினேன் பொழுதினை வாளா⋆
அலம் புரி தடக்கை ஆயனே! மாயா!⋆
வானவர்க்கரசனே!⋆ வானோர்
நலம் புரிந்திறைஞ்சும் திருவடியடைந்தேன்⋆
நைமிசாரணியத்துள் எந்தாய் (2)

சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து⋆
சுரி குழல் மடந்தையர் திறத்து⋆
காதலே மிகுத்துக் கண்டவா⋆ திரிந்த
தொண்டனேன் நமன்றமர் செய்யும்⋆
வேதனைக்கொடுங்கி நடுங்கினேன்⋆ வேலை
வெண் திரை அலமரக் கடைந்த
நாதனே⋆ வந்துன் திருவடி அடைந்தேன்⋆
நைமிசாரணியத்துள் எந்தாய் (3)

வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து⋆
    பிறர் பொருள் தாரம் என்றிவற்றை⋆
நம்பினார் இறந்தால்⋆ நமன்றமர் பற்றி
    எற்றிவைத்து⋆ எரி எழுகின்ற
செம்பினால் இயன்ற பாவையைப்⋆ பாவீ!
    தழுவென மொழிவதற்கஞ்சி⋆
நம்பனே! வந்துன் திருவடி அடைந்தேன்⋆
    நைமிசாரணியத்துள் எந்தாய் (4)

இடும்பையால் அடர்ப்புண்டு இடுமினோ துற்றென்று⋆
    இரந்தவர்க்கில்லையே என்று⋆
நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன் அந்தோ!⋆
    நினைக்கிலேன் வினைப் பயன் தன்னை⋆
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால்⋆
    படுவதோர் கொடு மிறைக்கஞ்சி⋆
நடுங்கி நான் வந்துன் திருவடி அடைந்தேன்⋆
    நைமிசாரணியத்துள் எந்தாய் (5)

கோடிய மனத்தால் சினத் தொழில் புரிந்து⋆
    திரிந்துநாய் இனத்தொடும் திளைத்திட்டு⋆
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன்⋆
    உணர்விலேன் ஆதலால்⋆ நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித்திட்டேன்⋆
    பரமனே! பாற்கடல் கிடந்தாய்!⋆
நாடி நான் வந்துன் திருவடி அடைந்தேன்⋆
    நைமிசாரணியத்துள் எந்தாய் (6)

நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும்⋆
    நீதி அல்லாதன செய்தும்⋆
துஞ்சினார் செல்லும் தொல் நெறி கேட்டே⋆
    துளங்கினேன் விளங்கனி முனிந்தாய்!⋆
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினில் பிரியா⋆
    வானவா! தானவர்க்கென்றும்

நஞ்சனே!⋆ வந்துன் திருவடி அடைந்தேன்⋆
    நைமிசாரணியத்துள் எந்தாய் (7)

ஏவினார் கலியார் நலிக என்று⋆ என்மேல்
    எங்ஙனே வாழும் ஆறு⋆ ஐவர்
கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன்⋆
    குறுங்குடி நெடுங்கடல் வண்ணா!⋆
பாவினாரின் சொல் பன்மலர் கொண்டு⋆ உன்
    பாதமே பரவிநான் பணிந்து⋆ என்
நாவினால் வந்துன் திருவடி அடைந்தேன்⋆
    நைமிசாரணியத்துள் எந்தாய் (8)

ஊனிடைச் சுவர் வைத்தென்பு தூண் நாட்டி⋆
    உரோமம் வேய்ந்தொன்பது வாசல்⋆
தானுடைக் குரம்பைப் பிரியும்போது⋆ உன் தன்
    சரணமே சரணம் என்றிருந்தேன்⋆
தேனுடைக் கமலத் திருவினுக்கரசே!⋆
    திரை கொள் மா நெடுங்கடல் கிடந்தாய்!⋆
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்⋆
    நைமிசாரணியத்துள் எந்தாய் (9)

‡ஏதம் வந்தணுகா வண்ணம் நாம் எண்ணி⋆
    எழுமினோ தொழுதும் என்று⋆ இமையோர்
நாதன் வந்திறைஞ்சும்⋆ நைமிசாரணியத்-
    தெந்தையைச் சிந்தையுள் வைத்து⋆
காதலே மிகுத்த கலியன் வாய் ஒலிசெய்⋆
    மாலை தான் கற்று வல்லார்கள்⋆
ஓத நீர் வையம் ஆண்டு வெண் குடைக் கீழ்⋆
    உம்பரும் ஆகுவர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥